# உழவன் குரல்

24
4.5

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 OCT 1952
MADRAS

பெ. எதிராஜன்,

சீர்காழி.

SCANNED



அ 3 ணை

J
M52
177344


ளிபதிப்பகம், சீகாழி

சோம்பலை நீக்கி

சுறுசுறுப்பளிப்பது

# ரோஜாப்பூ மார்க்

## சுருட்டுகளே !




டிரேட் மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

| உற்பத்தியாளர் :— | விற்பனையாளர் :— |
|---|---|
| **S. யாகூப் சாஹிப்,** | **M. அப்துல் கபூர்,** |
| தாடாளன் கோவில், | கடைவீதி, |
| சீர்காழி | சீர்காழி |

# "உழவன் குரல்"

"உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் வாழ வசதியும் எல்லோருக்கும் கிடைக்கும்போதுதான் சுதந்திரம் என்பதன் உண்மை விளங்கும்"

— காந்தியடிகள்,

**லட்சியம்:-** உழவர்களின் நியாயமான குறைகளேயும், கோரிக்கைகளேயும் பகிரங்கப் படுத்துவதும், நிலப்பிரபுத்துவ பலாத்காரக் கொடுமைகளேயும், சுரண்டல்களேயும் அம்பலப்படுத்துவதும், உழைப்பாளர்கள் ஏன் பலாத்காரச் செயல்களில் ஈடுபடக் கூடாதென்பதை தெளிவுபடுத்துவதும், நிலப்பிரச்னேயை எந்த அடிப்படையில் தீர்க்கவேண்டும் என்பதையும் தர்க்க ரீதியாக ஆதாரங்களுடன் எடுத்துக் கூறுவதே இச் சிறுநூலின் லட்சியம்

**பொருளாதாரப்புரட்சி:-** அந்நிய ஆட்சி அகன்றது. அரசியல் அடிமைத்தனமும் ஒழிந்தது. 1947 ஆகஸ்ட் 15 வரை அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடினேம்; வெற்றி பெற்றேம். இனிமேல் பொருளாதார சுதந்திரத்திற்காகப் போராடவேண்டும். ஏனெனில் அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதார சுதந்திரமும் பெற்றால்தான் நம் நாடு பூரணசுதந்திர நாடாகத் திகழமுடியும். நம் நாட்டில் பொருளாதார போராட்டத்தை நடத்துவது சுலபமல்ல. ஏனெனில் **முதலாளிவர்க்கம் மனித நீதிக்கு முரண்பட்ட வகையில் பலாத்காரமாக உழைப்பாளரின் உழைப்பையும் உரிமைகளேயும் பறித்துக் கொண்டிருக்கிறது.** பொருளாதாரத் துறையில் மலேக்கும் மடுவுக்குமான ஏற்றத்தாழ்வுகளே ஏற்படுத்தி மனித உண்மையையே மறைத்துவிட்டது.

உழைப்பாளரின் உரிமைகளை மறுப்பதும், உழைப்பைச் சுரண்டுவதும் பலாத்காரச் செயலாகும். இவ்வித பலாத்காரச் செயலுக்கு இடமளிப்பதும், அஞ்சிப் பணிவதும் கோழைத்தனமாகும். இந்த உண்மையை உணர்ந்துதான் உழைப்பாளர்கள் தங்களின் உரிமைகளையும், உழைப்பையும் பறித்து சுரண்டி சூறையாடும் முதலாளித்துவ பலாத்காரக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுகின்றனர். உழைப்பாளர்கள்நடத்தும் போராட்டங்கள் எல்லாம் வெறும் உரிமைப் போராட்டங்கள் மட்டுமல்ல; முதலாளித்துவ பலாத்கார எதிர்ப்புப் போராட்டங்களுமாகும். முதலாளித்துவ பலாத்கார கொடுமைகளையும், சுரண்டல்களையும் எதிர்த்து மனித உரிமைகளுக்காகப் போராட வேண்டியது மனித உண்மையை உணர்ந்த மனிதத் தன்மையுடன் வாழ வேண்டும் என்ற எண்ணமுள்ள ஒவ்வொருவருடையவும் கடமையாகும்.

**தக்க தருணம்:-** எந்தக் காரியத்தையும் சுற்றுப்புற சூழ்நிலைக் கேற்றவாறுதான் செய்து முடிக்க முடியும். இன்றைய உலக சூழ்நிலையானது முதலாளித்துவ பலாத்காரக் கொடுமைகளை எதிர்ப்பதற்குச் சாதகமாகவே இருக்கிறது. முதலாளித்துவக் கொடுமைகளால் பலவிதங்களிலும் பாதிக்கப்பட்டிருக்கும் பாட்டாளி மக்கள் அனைவரும் ஒன்று திரண்டுவிட்டனர். ஆங்காங்கு ஸ்தாபன ரீதியாக ஐக்கியமாகி முதலாளித்வக் கொடுமைகளுக்கும் சுரண்டல்களுக்கும் முடிவுகட்டத் துணிந்துவிட்டனர். ஒரு சில நாடுகளில் இவ்விதப் போராட்டங்கள் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கின்றன. ஆங்காங்கு நடைபெற்றுவரும் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்களின் நடைமுறைகளும், வழிகளும் மாறுபட்டிருக்கின்றன. ஆயினும் எல்லாப் போராட்டங்களின் அடிப்படை லட்சியமும் ஒன்றே என்பதை

யாரும் மறந்துவிடக் கூடாது. நமது நாட்டில் இவ் விதப் போராட்டத்தை தீவிரமாக நடத்துவதற்குத் தக்க தருணமும் இதுதான். ஆகையால் தொழிலாளர்கள் தங்களுக்குச் சாதகமான இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளத் தவறக்கூடாது.

**எச்சரிக்கை:-** உழைப்பாளரின் போராட்டம் உண்மையானது. எனவே அதை ஒடுக்கிவிடவோ, நசுக்கிவிடவோ உலகில் எந்த சக்தியாலும் முடியவே முடியாது. ஏனெனில் உண்மை தானே இறுதியில் வெற்றியடையும். உழைப்பாளரின் போராட்டந் தான் வெற்றியடையும் என்று எண்ணி முதலாளி வர்க்கம் சும்மா யிருக்குமா? தனது இறுதி மூச்சு இருக்கும் வரை முழு சக்தியையும் உபயோகித்து உழைப்பாளர்களின் உரிமைப் போராட்டங்களை எல்லா வழிகளிலும் எதிர்த்தே தீரும். இவ்வித எதிர்ப்புகளினால் தற்காலிகமாக சில விடங்களில் உழைப்பாளர்களுக்கு இடையூறுகளும் ஏற்படக் கூடும். ஆகையால் உழைப்பாளர்கள் தங்களின் லட்சிய சித்திக்காக நியாயமான வழிகளில் மகத்தான தியாகங்கள் புரியத் தயாராக இருக்கவேண்டும். "உரிமையுடன் வாழ்வோம். அல்லது உரிமைக்காக நியாய வழிகளில் போராடி மாள்வோம்" என்ற வீர உணர்ச்சி ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஏற்பட வேண்டும்.

**உற்பத்தி பெருக:-** இன்று நம் நாட்டில் உணவுப் பஞ்சமும், உடைப் பஞ்சமும் அதிகரித்திருக்கிறது. அதுமட்டுமா? ஏழை மக்கள் வசித்துவரும் பகுதி மனைக்கட்டுகளுக்கும் நிலப்பிரபுத்துவக் கொடுமையால் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இவ்விதமான முதலாளித்துவக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் சுதந்திரத்தின் தன்மையையே மறந்துவிட்டனர். இத்தேசமக்கள் காந்தியடிகளின்

தலைமையில் மகத்தான போராட்டங்களை காங்கிரஸ் மகாசபையின் பெயரால் நடத்தி பெற்ற சுதந்திரத்துக்கும் தங்களுக்கும் சம்மந்தமே இல்லாமற் போய் விடுமோ என்றுகூட அஞ்சுகின்றனர். நமது சர்க்கார் உணவுப் பஞ்சத்தைப்போக்க மனித சக்திக்குட்பட்ட எல்லா முயற்சிகளும் செய்துகொண்டுதா னிருக்கின்றனர் அந்நிய நாடுகளிலிருந்து அதிக விலை கொடுத்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கின்றனர். பல அபிவிருத்தித் திட்டங்களை தீவிரமாக நடத்தி வருகின்றனர். சர்க்காரின் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் வெற்றிகரமாக நிறைவேறினுல் பஞ்சமே இருக்கமுடியாது. ஆனுல் அந்த திட்டங்கள் நிறைவேற கொஞ்சகாலமாகும். எனவே இன்றுள்ள பஞ்சத்தைப்போக்க உடனடியாக ஏதாவது செய்தே யாகவேண்டும். அதற்கு ஒரே வழிதான் உண்டு.

அந்நிய ஆட்சியாளர்கள் நமது நாட்டின் ஜனத் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு உணவுப் பொருள் விளை நிலங்களையும் அதிகரிக்க முயற்சிக்க வில்லை. இருக்கும் நிலங்களுக்கும் சரியான முறையில் நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுக்கவில்லை எனவே, உடனடியாக செய்யவேண்டிய தெல்லாம் இருக்கும் நஞ்சை புஞ்சை நிலங்களை யெல்லாம் நல்ல முறையில் வளம்பெறச் செய்யவேண்டும் லாபத்தைக் கருதி வர்த்தகப் பயிர்களையே உற்பத்தி செய்யும் வழக்கத்தைத் தடுக்கவேண்டும். தற்சமயமுள்ள தற்சமயமுள்ள எல்லா பாசன வசதிகளையும் சரிவர பயன் படுத்திக்கொள்ள வேண்டும். உணவுப்பொருள் உற்பத்தியாளரான உழவர்களுக்கு உற்பத்திப் பெருக்கில் அதிக ஊக்கமேற்படச் செய்யவேண்டும்.

உழவர்களின் உள்ளம் பூரித்தால் உணவுப் பொருள் உற்பத்தியும் பெருகும். ஏனெனில் உரிமையும் கடமையும் ஒன்றுக்கொன்று பிணைப்பு உள்ளது.

அடிமை உள்ளத்தில் கடமை உணர்ச்சி ஏற்படச் செய்வது மிகவும் கடினம். எனவே சர்க்கார் உழவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு உடனடியாக சட்டசபைகளின் மூலம் தக்க பரிகாரம் கிடைக்கச் செய்யவேண்டும். அடிமைகளாக வாழும் **உழவர்களின் உரிமைகளுக்கு சட்டப்பூர்வமாக உத்திரவாதமும், பாதுகாப்புமளிக்க வேண்டும். உற்பத்திப் பொருள்களில் உழவர்களுக்கு நியாயமான பங்கு கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.**

நம் நாட்டில் உள்ள உழவர்களோ மிகவும் ஏழைகள். உழைக்கும் சக்தியைத் தவிற வேறு எவ்வித சொந்த சொத்தும் அவர்களிடமில்லை. மக்களின் பசிப்பிணியைப் போக்க பகல் இரவு என்று பார்க்காமலும், வெய்யில் மழை யென்று கருதாமலும் கஷ்டப்பட்டு உழைக்கின்றனர் உழவர்கள். ஆனால் உழவர் குடும்பங்களோ உண்ண உணவிற்கும், உடுக்க உடைக்கும், இருக்க சொந்த இடத்துக்கும் வழியின்றி வாடுகின்றனர்.

**நிலப்பிரபுத்துவக் கொடுமை:—** இந்த நிலைமையில், உழுது - விதைத்து - நட்வுநட்டு - களையெடுத்து காலத்தில் தண்ணீர் பாய்ச்சி - காவல் புரிந்து - அறுவடை செய்து கண்டுமுதலாகும் தான்யங்களையெல்லாம் ஆண்டை வீட்டுக் களஞ்சியங்களில் கொண்டுபோய் கொட்டிவிட்டு நியாயமாகத் தமக்குச் சேரவேண்டிய கூலி, வாரதான்யங்களைக் கேட்கின்றனர் உழவர்கள். கணக்குப்படி கிடைக்கவேண்டியவற்றை வற்புறுத்திக் கேட்கும் உழவர்களை கலகக்காரர்கள், பலாத்காரவாதிகள், அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் என்றெல்லாம் கூறிவிடுகின்றனர் சில பெரிய நிலச்சுவான்தார்கள். சர்க்கார் அதிகாரிகளுக்கும் உழவர்களைப்பற்றி பல பொய்யான தகவல்களைக்கொடுத்து பழிவாங்கி கொடுமைக்குள்ளாக்கு

கின்றனர். சிலரை வேலையிலிருந்து விலக்கியும், பலரை நிலங்களிலிருந்தும், மனைக்கட்டுகளிலிருந்தும் வெளியேற்றியும் அக்கிரமங்கள் செய்கின்றனர்.

பெரிய நிலச்சுவான்தார்களின் இவ்வித அக்கிரமச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. நாட்டின் சுதந்திரம் தங்களுக்கு மட்டுமேதான் சொந்தமானதென்று எண்ணுகின்றனர் பல மிராசுதார்கள். சில சர்க்கார் அதிகாரிகளுங் கூட இவ்வித நிலச்சுவான்தார்களின் அக்கிரமச் செயல்களைத் தடுக்கத் தயங்குகின்றனர். உழவர்களுக்கோ அரசியல் அனுபவமில்லை. அதிகாரிகளிடம் நெருங்கிய தொடர்புமில்லை. பல அதிகாரிகள் ஏழைகளைக் கண்டாலும் அலட்சியப் படுத்துகின்றனர். சில அதிகாரிகள் ஏழைகள் கூறுவதை நம்புவதேயில்லை. இவ்வித பல காரணங்களினுல் உழவர்கள் தங்களுக்கு நிலச்சுவான்தார்களால் ஏற்படும் இன்னல்களை அதிகாரிகளிடம் சொல்லுவதற்கே அஞ்சுகின்றனர்.

கடமை உணர்ச்சியுடன் காரியங்கள் செய்து வரும் பல அதிகாரிகள் உழவர்களுக்கு சட்டப் பூர்வமான முறையில் நியாயம் வழங்கத் தயங்குவதில்லை. நியாயமாக நடக்கும் நேர்மையாளர்களுக்கு முதலாளி வர்க்கத்தினரால் ஏற்படும் தொல்லைகளோ அதிகம். தங்களின் பண பலத்தினுலும், மற்றும் பலவித வசதிகளினுலும் தங்களிஷ்டப்படி நடவாத அதிகாரிகளை இடப்விட்டு இடம் மாற்றுவதற்கும், அவசியமானுல் வேலையிழக்கச் செய்வதற்குங்கூடத் தயங்க மாட்டார்கள். பெரிய நிலச்சுவான்தார்கள் செய்யும் மற்றொரு பெரிய காரியம் என்ன தெரியுமா? உழவர்களுக்குச் சேரவேண்டிய நியாயக் கூலி, வாரம், களவடி முதலியவைகளைக் கொடுக்க மறுக்கும் மிராசுதார்களின் கொடுமைகளையெல்லாம் "கிசான்

தகராறு" என்று பிரசாரம் செய்துவிடுகிறார்கள். கட்டுப்பாடான முறையில் தங்களின் அக்கிரமச் செயல்களை யெல்லாம் மறைத்து உழவர்களின் மீது வேண்டுமென்றே பழிசுமத்தி, சர்க்கார் அதிகாரிகளும் அதை உண்மையென்று நம்பும்படிச் செய்து கொடுமை புரிவதற்கான எல்லா வசதிகளும் பெரிய நிலச்சுவான்தார்களுக்கு இருக்கின்றன.

**வாழ்க்கைப் போராட்டம்:-** நம்நாடு அரசியல் சுதந்திரம் அடைந்த பிறகு உழவர்களின் உரிமைப் போராட்டங்களும் அதிகரித்து வருகின்றன. இதைக் கண்டு நிலச்சுவான்தார்கள் ஆத்திரப்படுகின்றனர். அரசியல் சட்ட உதவியையும், அதிகாரிகளின் ஆதரவையும் கொண்டு உழவர்களின் உரிமைப் போராட்டங்களை எப்படியாவது தடுத்து நசுக்கிவிடலாம் என்று கனவு காண்கின்றனர். நிலச்சுவான்தார்களின் இந்த எண்ணம் நிச்சயமாக ஈடேறாது. ஆயினும் நிலச்சுவான்தார்கள் ஸ்தாபன ரீதியில் ஒன்று சேர்ந்து உழவர்களின் உரிமைப் போராட்டங்களை எதிர்த்து ஒடுக்குவதற்காக பெருமுயற்சி செய்கின்றனர். நிலச்சுவான்தார்களின் இந்த முயற்சியைக் கண்டு உழவர்கள் அஞ்சவுமில்லை, ஆத்திரங் கொள்ளவுமில்லை. ஆனால் ஆங்காங்கு ஏற்பட்டுவரும் உழவர்களின் ஸ்தாபனங்களைக் கண்டு நிலச்சுவான்தார்கள் ஏன் ஆத்திரப்பட வேண்டும் என்றுதான் கேட்கின்றனர் உழவர்கள்.

உழவர்கள் நடத்தும் எல்லா போரட்டங்களும் அரசாங்கத்தைக் கைப் பற்றுவதற்காகவோ அல்லது அரசியல் சீர்குலைவு ஏற்படச் செய்வதற்கோ அல்ல. **உழவர்களின் இன்றய போராட்டமெல்லாம் தற்கால நிலைமைக்கேற்ப உழவர்களின் வாழ்க்கைத்தரமும் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காகவே நடைபெறுகின்றன. நிலப்பிரபுத்துவக் கொடுமைகளி**

லிருந்தும் விடுதலை யடைவதற்காகவே உழவர்கள் போராடுகிறார்கள். அவர்களின் நியாயமான இந்த லட்சியம் நிறைவேறும் வரை நேர்மையான வழி களில் போராட்டமும் நடைபெற்றே தீரும். ஆங் காங்கு உழவர்களிடையே ஏற்பட்டுவரும் ஒற்று மையை குலைக்க நிலச்சுவான்தார்கள் தீவிர முயற்சி செய்து வருகின்றனர். உழவர்களிடையே சாதி, மத, இன, குல பாகுபாடுகளைப் புகுத்தியும், உழவர் களின் ஸ்பானங்களை சீர்குலைத்தும், ரகசியமாகவும், பகிரங்கமாகவும் பல காரியங்களைச் செய்கின்றனர். இவ்வித நியாய விரோத முறைகளினாலும், சுயநல சூழ்ச்சிகளினாலும் ஜன நாயக ரீதியில் வளர்ச்சி யடைந்து நடைபெறும் உழவர்களின் உரிமைப் போராட்டங்களை தடுக்கவோ, நசுக்கிவிடவோ எந்த சக்தியாலும் முடியாது.

நிலம் யாருக்கு சொந்தம்:— உழுவர்களுக்கே நிலம் சொந்தம் என்றார் உலகப் பெரியார் காந்தி யடிகள். காற்றைப் போல், தண்ணீரைப் போல், சூரிய உஷ்ணத்தைப் போல் நிலமும் அனைவருக்குமே பொதுவானது என்று கூறுகிறார் நமது வணக்கத்திற் குரிய ஆத்மீகப் பெரியார் ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள். காற்றும், தண்ணீரும் போலவே நிலமும் இயற்கையானதே. எவரும் பூமியை உண்டாக்க வில்லை. எனவே மற்றவைகளைப் போலவே நிலமும் அனைவருக்கும் பொதுவேயாகும். இந்த உண்மையை எவரும் எந்தக்காரணங் கூறியும் மறுக்க முடியாது.

இன்றைய ஜமீன்தாரி முறையும், நிலச்சுவான் தாரிமுறையும் நியாயமற்ற முறையில் ஏற்பட்டவை; மனித நீதிக்கு முரண்பட்டவை. ஆதிகாலத்தில் இவ்வித ஜமீன்தாரி முறையோ, நிலச்சுவான்தாரி முறையோ இருந்திருக்கவில்லை. மக்கள் தாங்களாகவே தங்களின் சுய தேவைக்கானவைகளை தங்களின் சுய

உழைப்பினுல் உற்பத்தி செய்து உபயோகித்து வந்தனர். ஒருவர் உழைப்பை மற்ருெருவர் சுரண்டும் தீயகாரியம் அக்காலத்தில் இருந்ததில்லை. காலப் போக்கில் ஆங்காங்கு மக்களுக்கு தலைமையாளர் களாக இருந்தவர்கள் உழவர்களின் அனுபவத்தில் இருந்த நிலங்களையெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டனர். உழைத்து வாழ்ந்த உழைப்பாளர் களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டவர்கள் தான் பின்னுளில் நிலப் பிரபுக்களாகி விட்டனர். உழவர்களிடமிருந்த நிலங்கள் நிலப்பிரபுத்துவக் கூட்டத்தினரால் ஆக்ரமித்துக்கொள்ளப்பட்ட பிறகு தான் வர்க்க பேதமுற்றிருந்த மனித சமூகத்தில் ஆண்டை—அடிமை என்ற ஏற்றத்தாழ்வும், சுரண்டு வோர்—சுரண்டப்படுவோர் என்ற வேற்றுமையும் ஏற்படலாயின. உலகப் பேரறிஞர்களும், மனித சரித்திர ஆராய்ச்சியாளரும் இந்த முடிவுக்குதான் வந்திருக்கின்றனர். ஆதிகாலத்தில் உழவர்களின் சொந்த அனுபவத்திலிருந்து வந்த நிலங்களை பலாத் காரமாக ஆக்கிரமித்துக் கொண்ட பரம்பரையினர் இன்று சட்டப்பூர்வமான நிலச் சொந்தக்காரர் களாகவும், இன்றுங்கூட நிலத்தை உழுது சாகுபடி செய்து வரும் உழவர்கள் அடிமைகளாகவுமே கருதப் படுகின்றனர். "மனிதர்களுக்காக சட்டமா? அல்லது சட்டத்திற்கா மனிதர்களா? என்னும் பிரச்சனை இங்குதான் ஏற்படுகிறது.

இன்றைய நடை முறையிலுள்ள சம்பிரதாயங் களைக் கூர்ந்து கவனித்தாலுங்கூட நிலங்கள் எல்லாம் சர்க்காருக்குத்தான் சொந்தமே தவிர "கிஸ்தி" செலுத்தும் நிலச்சுவான்தாரர்களுக்குச் சொந்தமில்லை என்பது விளங்கும். இவ்வாறு கூறுவது பலருக்கு புதிராகத் தோன்றும். ஆயினும் அதுதான் உண்மை எவ்வாறெனில் சர்க்கார் தங்களின் அதிகார எல்லைக் குட்பட்ட நிலங்களை நிலவளத்திற்கும், நீர்ப்பாசன

வசதிகளுக்கும் தக்கவாறு பலரிடம் ரொக்கக் குத்தகைக்கு கொடுத்திருக்கின்றனர். அந்த குத்தகை தான் "கிஸ்தி" என்று கூறப்படுகிறது. அக்காலத்தில் நம் நாட்டிலிருந்த பலமன்னராட்சியிலுங்கூட "ஆறில் ஒரு கடமை" "நாலில் ஒரு கடமை" என்றெல்லாம் வசூலித்து வந்தனர் என்று கூறப்படுகிறதல்லவா? அதுவார முறையாகும். இப்போது சர்க்கார் வசூலிக்கும் "கிஸ்தி" தொகையானது குத்தகை முறையாகும். அக் காலத்திய முறையானது மொத்த கண்டுமுதலின் மதிப்புத் தொகையில் விகிதாசாரம் வசூலிக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. இன்றய நிலச்சுவான்தார்கள் விளைவு குறைந்து விட்டாலும், பயிர்கள் சாவியாகி விட்டாலும் கிஸ்தி வஜா செய்யும் படி சர்க்காரைக் கோருன்றனர் அல்லவா? உண்மையிலேயே நிலங்கள் நிலச்சுவான்தார்களுக்கே சொந்தமான தென்ருல் "கிஸ்தி" வஜா கோரிக்கை அவசியமற்றது. நிலங்கள் நிலச்சுவான்தார்களுக்கே சொந்தமென்ருல் தண்ணீர் தீர்வை மட்டுமே தான் சர்க்காருக்கு செலுத்தவேண்டும். ஆனுல் நிலத்தீர்வை தண்ணீர் தீர்வை எல்லாமே சர்க்கார் வசூலிப்பதின் காரணமென்ன? நிலங்கள் எவருடைய அனுபவத்தி லிருந்தாலும் அவைகளின் ஆதிபத்திய அதிகார உரிமை சர்க்காருக்கே சொந்தமென்பதினுற்ருன்.

சர்க்காருக்கு சொந்தமான நிலங்களை "கிஸ்தி" எனும் குறைந்த குத்தகைக்கு ஒப்புக்கொண்டிருக்கும் நிலச்சுவான்தார்கள் உழவர்களின் உழைப்பைச் சுரண்டுவதுடன் அவர்களை மிருகங்களினும் கேவல மாகக் கருதுகின்றனர் தங்களின் உபயோகத்திற்காக வைத்துக்கொண்டிருக்கும் மாடு, குதிரை, நாய்களுக் குக்கூட உயர்தர உணவு வகைகளைக் கொடுக்கும் நிலச்சுவான்தார்கள் உழவர்களுக்கு நியாயமான அளவு சாதாரண உணவுகூட அளிக்க மறுக்கிருர்கள் தங்கள் உபயோகத்திற்கென விருக்கும் மிருகங்களின்

சுகவாழ்விற்கென்று சுகாதார வசதிகளுடன் கட்டிடங்கள் கட்டுகின்ற பல நிலச்சுவான்தார்கள் உழவர்கள் வசிப்பதற்கு வசதியான வீடுகளைக்கட்டிக் கொடுக்க மறுக்கின்றனர். இவ்வாறெல்லாம் உழைப்பாளர்களை சுரண்டி அடிமைப்படுத்தும் கொடுமை நிறைந்த நிலப்பிரபுத்துவமுறை இனியும் நீடிக்கக் கூடாது என்பதும், காலமாறுதலுக்கும், சுற்றுப்புற நாடுகளில் நிகழ்ந்துவரும் சம்பவங்களுக்கும் ஏற்றவாறு நமது சர்க்காரும் தங்களின் நிலக்குத்தகை முறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதுமே உழவர்களின் கோரிக்கையாகும்.

சர்க்காருக்கும் உழவர்களுக்கும் மத்தியில் நிலச்சுவான்தாரர்களோ, மற்றெந்த இடைமனிதர்களோ இருக்கவே கூடாது சர்க்காருக்கும் உழவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். அவ்வாறிருப்பின் உற்பத்தியைப் பெருக்குவது தங்களின் தேசியக்கடமையெனக் கருதி செயலாற்றுவார்கள் உழவர்கள். இந்த அடிப்படையில் நில சீர்திருத்தம் ஏற்பட்டால்தான் நிரந்தரமான நற்பயனைக் காண முடியும்.

**அவசியமும்-அவசரமும்:-** **நமது சர்க்கார் நியாயமான அடிப்படையில் நிலப்பிரச்சனையைத் தீர்க்க உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.** ஜனநாயக முறையில் நடைபெறும் நமது அரசாங்கத்தில் இப்பிரச்சனையை ஒரே நாளில் முடிவு செய்துவிட முடியாது. நமது நாட்டின் அரசியல் அமைப்புக்கு ஏற்றவாறு சட்ட நுட்பங்களைப் பரிசீலனை செய்து சட்ட சபைகளில் மக்களின் பிரதிநிதிகளாலும், பொருளாதார, அறிஞர்களாலும், விவசாய ஆராய்ச்சியாளர்களாலும், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் முதலியவர்களாலும் விவாதிக்கப்பட்டு தீர்க்கமாக முடிவு செய்ய வேண்டிய மிகப்

பெரிய அவசர அவசியகாரியமாகும் அவ்வாறுசெய்து முடிப்பதற்கு கொஞ்சகாலமாவது அவகாசம் வேண்டும் அதுவரையிலும் உழவர்களுக்கு தற்காலீக நிவாரணமும், பாதுகாப்பும் அளிக்க வேண்டும் இல்லாவிட்டால் நிலப்பிரபுத்துவக் கொடுமைகளுக்கு எல்லையே இல்லாமற் போய்விடும். உழவர்களும் பொறுமையிழந்துவிட நேரிடும் துரதிர்ஷ்டவசமாக அவ்வித சூழ்நிலை ஏற்பட்டால் பலநாச சக்திகளும் பலாத்காரத்திலேயே நம்பிக்கையுள்ளவர்களும், ஜன நாயக விரோதிகளும் உழவர்களிடையே பலவிதமான பொய் பிரசாரங்கள் செய்து, கல்வியற்ற அவர்களை தவறான ஒழுங்கீன சட்ட விரோதமான தங்கள் கட்சிக்குசாதகமான அராஜகப்பாதையில்அழைத்துச் செல்ல முயற்சிப்பார்கள். அதன்காரணமாக நாட்டில் குழப்பங்களும் கலவரங்களும் அதிகரிக்கும். கொள்ளை களும், கொலைகளும் பெருகும். ஏராளமான நிலங் களும் சாகுபடியாகாமல் தரிசாகக் கிடக்கக்கூடும். ஆகையால் சர்க்கார் நிலப்பிரச்சனையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**உழவர்களின் எழுச்சி:**—உழைத்துக்கொடுப்பது உழைப்பாளியின் கடமையென்றும் உழைப்பைச் சுரண்டுவது முதலாளிகளின் உரிமையென்றும் சில சுயநலமிகளும், சூழ்ச்சிக்காரர்களும், சில மதவாதி களும் பல்லாண்டுகளாகவே பாமர பாட்டாளி மக்க ளிடம் போதனை செய்துவந்தனர். அப்பாவிகளான உழைப்பாளர்களும் அந்த போதனைகளை அப்படியே நம்பி ஏமாந்துவிட்டனர். ஆயினும் ஹாரிஸன், ஆப்ர காம் லிங்கன், மாஜினி, கார்ல் மார்க்ஸ், மகாத்மாகாந்தி யடிகள் போன்ற உலகத்தலைவர்களும், பல அரசியல் கட்சியனரும், தொழிற் சங்கத்தினரும் உழைப் பாளரின் உரிமைகளையும், கடமைகளையும் நன்கு உணர்த்தி விழிப்பு ஏற்படச் செய்து விட்டனர்.

**உழவர்களுக்கு:**— சமீபகாலமாக நமது நாட்டில் பல புதிய கட்சிகள் தோன்றியிருக்கின்றன. சில அரசியல் கட்சியினர் உழைப்பாளர்களைத் தங்கள் கட்சியின் வளர்ச்சிக்கு கருவியாக உபயோகித்துக் கொள்ளுகின்றனர். சில அரசியல் கட்சியினர் அனுபவசாத்தியமற்ற பலகாரியங்களை சாதித்துவிடுவதாக உறுதிகூறி உழைப்பாளரின் ஆதரவை நாடுகின்றனர் அரசியல் அனுபவமற்ற உழைப்பாளரும் இவர்களின் பொய் பிரசாரங்களை நம்பி அக்கிரமச் செயல்களில்-பலாத்காரச் செயல்களில் சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபட்டு கஷ்ட நஷ்டமடைகின்றனர். தொழிலாளர்களைக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டிவிட்டு அதன் காரணமாக தொழிலாளர்களுக்கு இடையூறு ஏற்பட்டால் அவர்களை காட்டிக் கொடுத்து விட்டு தாங்கள் மட்டும் தலைமறைவாக ஓடி ஒளிந்துவிடும் நபர்களைக் கொண்ட கட்சிகளும் நம் நாட்டில் இருக்கின்றன. இவ்விதக் கட்சிகளினால் தொழிலாளர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படமுடியாது.

உழவர்கள் எக்காரணங் கொண்டும் எக்காலத்திலும் எவருடைய வார்த்தைகளைக் கேட்டும் பலாத்காரச் செயல்களில் ஈடுபடக்கூடாது சொந்த நாட்டின் மீது விசுவாசமற்றதும் அரசியலைக் கைப்பற்ற உழைப்பாளர்களைக் கருவியாக உபயோகித்துக் கொள்ள முயற்சிப்பதும், ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றதும்; சர்வாதிகார ஆட்சி நடத்த விரும்புவதும் பலாத்காரத்திலேயே நம்பிக்கையுள்ளதுமான எந்தக் கட்சியிலும்உழவர்கள் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது. முதலாளித்துவ பலாத்காரத்தை நமது நாட்டின் பண்பாட்டிற்கு ஏற்ற சாத்வீக முறையிலேயே எதிர்த்து வெற்றிகாணவேண்டும்

உழவர் ஸ்தாபனங்கள் தொழிற் சங்க ரீதியில் அமைக்கப்பட்டு வளர்ச்சியடைய வேண்டும். உழவர் ஸ்தாபனங்கள் வெறும்போராட்ட ஸ்தாபனங்களாக

மட்டும் இல்லாமல் ஆராய்ச்சிக் கூடமாகவும் செயல் புரிய வேண்டும் விவசாய சம்பந்தமான எல்லா விஷயங்களையும் பிரசாரங்களின் மூலம்உழவர்களுக்கு போதிக்க வேண்டும். குறிப்பிட்ட சில விடங்களில் உழவர் ஸ்தாபனங்களே புதிய முறையில் சாகுபடி செய்து அதிக உற்பத்தி இயக்கத்தில் மற்றவர் களுக்கும் ஊக்கம் ஏற்படச் செய்யவேண்டும். எந்த அரசியல் கட்சிக்கும் உழவர் ஸ்தாபனங்கள் அடிமை யாகி விடக்கூடாது. ஆட்சியைக் கைப்பற்ற வேண்டு மென்ற எண்ணத்துடன் தொழிற்சங்க இயக்கங்களில் ஈடுபடுவோர் எப்பொழுதுமே தொழிலாளர்களை சர்க் காருக்கு எதிர்கட்சியினராக ஆக்கிவிடவே முயற்சிக் கின்றனர். அவ்வாறு செய்வதால் தொழிலாளர் களுக்கு பாதகமேதான் ஏற்படும் என்பது உலக அனுபவம்.

நமது நாட்டில் கட்சிகள் அதிகமாக அதிகமாக தொழிலாளர்களின் ஒற்றுமை சீர்குலைந்து வருகிறது. தொழிலாளர்கள் பல கட்சியினராகப் பிரிந்து விடு வதால் தங்களின் லட்சியத்தையே மறந்து வெவ்வேறு வழிகளில் சென்று விடுகின்றனர். தொழிலாளர் களிடையே இவ்வித கட்சி வேற்றுமை ஏற்படுவதை கண்டு முதலாளி வர்க்கம் மகிழ்ச்சியடைகிறது. ஆகையால் தொழிலாளர்கள் அனைவரும் இனியாவது கட்சிவாதங்களை விட்டு, ஒன்றுபட்டு சட்டப்பூர்வ மான முறையில் சர்க்கார் ஆதரவுடன் தங்களின் பொருளாதார சுதந்திரப் போராட்டங்களைத் தொடர்ந்து தீவிரமாக நடத்த உறுதி கொள்ள வேண்டும்.

**எந்தப்பாதை?:**—உழவர்கள் தங்களின் போராட் டங்களை ஏன் சாத்வீக வழியில் நடத்த வேண்டும்? முதலாளித்துவ பலாத்காரத்தை தொழிலாளித்துவ பலாத்காரத்தினுல் முறியடிப்பதில் தவறு என்ன வென்று கேட்கலாம். பத்தொன்பதாம் நூற்றுண்டின்

மத்தியகால ஐரோப்பா கண்டத்தின் அரசியல் சூழ் நிலையானது ஜனநாயக தன்மையற்றிருந்தது. மத போதகர்களின் ஆணைப்படியே மன்னர்கள் ஆட்சி நடத்தினர். மன்னர் சொன்னதே சட்டமாயிருந்தது அக்காலத்திய மன்னர்கள் மக்களின் குறைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் செவி சாய்க்கவில்லை. அந்தக் காரணத்தினுல் அக்காலத்திய மக்கள் முடியாட்சிக்கு முடிவுகட்ட தீர்மானித்தனர். அதற்கு அன்றைய சூழ் நிலையில் வேறு வழியேதும் இல்லாமையால் பலாத்கார இயக்கங்களை நடத்தினர். அந்த தேச மக்களும் அந்தபலாத்கார இயக்கங்களை ஆதரித்தனர் அதே நடைமுறைகளையும், திட்டங்களையும், அப் படியே இருபதாம் நூற்ருண்டின் மத்தியகால ஜன நாயக இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுவது அறிவீனமாகும். இருபதாம் நூற் ருண்டின் உலக சூழ்நிலைக்கேற்றது காந்தீயதிட்டமும் காந்தீய வழியுமே.

**உழவன் குரல் :—** இதுவரை உழவர்களின் நியாயமான குறைகளையும், கோரிக்கைகளையும் தெளி வாகஎடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ கொடுமைகளையும், சுரண்டல்களையும் சூழ்ச்சிகளையும் பகிரங்கமாக விளம்பரம் செய்யப் பட்டிருக்கிறது. நிலப்பிரச்சனையை தீர்க்கவேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் நிலப்பிரச்சனையை தீர்க்கும்போது ஏற்படக்கூடிய கஷ்டங்களையும், அதை எவ்வாறு சர்க்கார் சமாளிக்க வேண்டும் என்பதையும், நிலவுரிமைபற்றிய விஷயங்களையும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. உழவர்களுக்கு தற்காலீக நிவாரணம் வேண்டுமென்றும் கோரப்பட் டிருக்கிறது.

உழவர்களின் உழைப்பைச் சுரண்டிவாழும் இடை மனிதர் குத்தகை முறையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். தரிசு கிடக்கும் சர்க்கார்

புறம்போக்கு நிலங்களை அனுபவ உரிமையுடன் உழவர்களிடமே ஒப்படைத்து அதிகமான உணவுப் பொருள் உற்பத்தி செய்ய ஊக்கமளிக்க வேண்டும் நடைமுறையிலுள்ள பண்ணை சாகுபடி முறையும், ராஜீகம்,தெய்வீகமற்ற குத்தகை முறையையும் ரத்து செய்து வார சாகுபடி முறையை எங்கும் உடனடியாக அமுல் நடத்தச் செய்யவேண்டும் நிலத்தில் உழுது சாகுபடி செய்யும் உழவர்களையே "விவசாயி" என்று சர்க்கார் கருதவேண்டும் பண்ணை, குத்தகை, வார சாகுபடிக்காரர்களுக்கு பல வருஷங்களாகத் தொடர்ந்து இருந்து வரும்பழய கடன்களையெல்லாம் ரத்துசெய்ய வேண்டும் உழவர்கள் அறிஞர்களாகவும் உரிமையுணர்ச்சி கொண்டவர்களாகவும் முன்னேற்றமடைந்து வருவதைக் கண்டு பொறாமை கொண்ட சுயநலமிகளின் தவறான பிரசாரங்களை நம்பி சர்க்கார் மீண்டும் மதுபானக் கடைகளைத் திறக்கக்கூடாது. மடாலயங்கள், அறநிலையங்கள், தேவாலயங்களின் நிலங்களையெல்லாம் கூட்டுப் பண்ணைகளாக்க வேண்டும். மூன்று ஏக்கருக்குக் குறைவான நிலத்திற்கு கிஸ்தியே வசூலிக்கக்கூடாது. எக்காரணங்கொண்டும் பகுதி மனைக்கட்டுகளில் வசித்துவரும் ஏழைக் குடும்பங்களை வெளியேற்றக் கூடாது முடியுமானால் மேற்படி மனைக்கட்டுகளை அந்தந்த மனைக்கட்டுகளில் வசித்துவரும் ஏழைகளுக்கே சொந்தமாக்கிக் கொடுக்கவேண்டும். இவையெல்லாம் ஏழைகளுக்கு சர்க்கார் செய்து கொடுக்க வேண்டிய தற்காலீக நிவாரண ஏற்பாடுகளே.

உழவர்கள் ஒன்று திரண்டு தங்களின் உரிமைகளுக்காக நேர்மையானவழிகளில் போராடவேண்டும் அப்பொழுதுதான் அவர்களின் நியாயமான குறைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் சர்க்கார் உடனடியாக செவிசாய்த்து நியாயம் வழங்கும்.

"கேட்டால் கொடுக்கப்படும்" "தட்டினுல் திறக்கப்படும்"

# டெஸ்லா (TESLA)

## ரேடியோ

குறைந்த வருமானமுள்ளவர்களும் வாங்கி
உபயோகிக்கத் தக்கவாறு
ரூ. 235/- முதல் ரூ. 480/- வரை கிடைக்கும்

**கிராமவாசிகளுக்கு**

## டெஸ்லா டிரைபாட்ரி ரேடியோ

ஏழு வால்வுகள் உள்ளது விலை ரூ. 365/-
எல்லா ரேடியோக்களுக்கும் ஓராண்டு
உத்திரவாதம்

எல்லாவிதமான ரேடியோக்களும்
அரிய சாதனங்களைக்கொண்டு குறித்தகாலத்தில்
ரிப்பேர் செய்து கொடுக்கிறோம்.

**புதிய ஒலிபெருக்கி கருவிகள்**
விலைக்கும், வாடகைக்கும் கிடைக்கும்.

---

விபரங்களுக்கு :-

## மூர்த்தி ரேடியோ சர்வீஸ்,

**எலக்ட்ரான் ஹவுஸ்,**
தபால்பெட்டி எண் 23, பிடாரி வடக்குவீதி,
சீர்காழி.

ரேடியோக்களில் சிறந்தது

# பிலிப்ஸ் (PHILIPS)

## ரேடியோவே.



உலகப்புகழ்

"பிலிப்ஸ்"

ரேடியோக்கள்

ரூ. 300 முதல்

ரூ. 2500 வரை

கிடைக்கும்

உயர்ந்த ரக பிலிப்ஸ் ரேடியோக்களும், சிறந்த எலக்டிரிக் சாமான்களும் கிடைக்கும்.

ஒலி பெருக்கிகளும், தற்காலீகமாகவும், நிரந்தரமாகவும் மின்சார விளக்குகளும் உத்திரவாதத்துடன் அமைத்துக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு :—

## ரமணி ரேடியோஸ்

தபால் பெட்டி நெ. 13, கடைவீதி, சீர்காழி.

பாண்டியன் அச்சகம் சிதம்பரம் '52